**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 600 006**

மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள்

ந.க. எண். 893 / C3 / SS / 2019, நாள் 05.02.2020

| | |
|---|---|
| பொருள் | ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (இடைநிலை) – 2019–20ஆம் ஆண்டு – மொழித்திருவிழா (Celebration of Language Festival) – நெறிமுறைகள் வழங்குதல் மற்றும் நிதி விடுவித்தல் – சார்பு. |
| பார்வை | மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை திட்ட ஏற்பளிப்புக் குழுக் கடிதம் எண். F.No.28–3/2019–20, நாள் 16.07.2019 வ.எண். 66–c. |

*********

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ் 2019–20 ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தங்களது தேசிய ஒருமைப்பாட்டினை வெளிப்படுத்தும் விதமாக தேசிய அளவில் உள்ள பல்வேறு மொழிகளை மகிழ்ச்சியோடும், திறனோடும், தன்நம்பிக்கையோடும் அணுகும் விதத்திலும், மொழியின் தொன்மை, பண்பாடு போன்ற கலாச்சாரம் சார்ந்த சிறப்பு கூறுகளை அறிந்து கொள்ளும் வகையிலும், பள்ளிகளில் மொழித்திருவிழா (Celebration of Language Festival) கொண்டாட மத்திய மனித வள மேம்பாட்டு துறையால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**இவ்வகையான மொழித் திருவிழாக்களை கொண்டாடுவதன் உயரிய நோக்கங்கள் :**

- மாணவர்கள் பல்வேறு மொழிகளை மகிழ்ச்சியோடு திறனோடும், தன்னம்பிக்கையோடும் அணுகுதல். அவர்களின் கலந்துரையாடும் திறனை வளர்த்தல்.
- பல்வேறு மொழிகளின் சிறப்புக் கூறுகளை அறிந்து கொள்ளுதல், அவற்றின் மூலம் மாணவர்களுக்குள் கருத்தொருமையை உருவாக்குதல்.
- பல்வேறு மொழிகளின் தொன்மையையும் பண்பாட்டினையும் அறிதல்.
- பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் கொண்டாடும் விழாக்களின் சிறப்புகளை அறிதல்.
- உணவு, உடை, நிலம் போன்றவை சார்ந்த பல்வேறு பழக்கவழக்கங்களை அறிதல்.
- பல்வேறு மொழிபெயர்ப்புப் படைப்புகளைக் குறித்து அறிதல், அம்மொழிகளில் படைக்கப்பட்டிருக்கும் இலக்கியங்களை அறிதல். அவற்றின் ஒற்றுமைகளை அறிதல்.
- பல்வேறு மொழிகளின் தொடர்பு நிலைகளையும் ஒற்றுமைகளையும் உணர்தல்.
- பல்வேறு கலைகளில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை அறிதல்
- எல்லாவற்றிற்கும் மேலாக மாணவர்களிடையே தேசிய ஒருமைப்பாட்டை வளர்த்தல்.

Scanned by CamScanner

மொழித்திருவிழாவினைக் வரும் 14.02.2020 வெள்ளி அன்று அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள போட்டிகளை நடத்தி கொண்டாட அறிவுறுத்தப்படுகிறது.

போட்டி விவரங்கள்

- பேச்சுப்போட்டி
- கட்டுரைப்போட்டி
- கவிதைப்போட்டி
- ஓவியப் போட்டி
- நடனப் போட்டி
- மாறுவேடப் போட்டி
- செய்தி சேகரிப்பு
- பல்வேறு படைப்புகள்
- கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்துதல்
- குழுசெயல்பாடுகள்
- பாடல்
- குறுநாடகம்
- கலந்துரையாடல்
- வினாடி வினா

இவற்றிற்கான உட்தலைப்புகள்

- மொழிகளின் தொன்மை
- இலக்கண இலக்கிய வளம், மொழிகளுக்குள் அமைந்துள்ள தொடர்பு
- வீர விளையாட்டுகள்
- பாரம்பரிய விளையாட்டுகள்
- நாட்டுப்புறக் கலைகள்
- விழாக்கள்
- ஊடகம் சார்ந்த நிகழ்வுகள்
- மாத இதழ்கள், நாளிதழ் , வார இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், இணையம்
- மாணவர்களை கவர்ந்த சமகால நிகழ்வுகள்
- படித்தல் திறன் சார்ந்த போட்டிகள்



Scanned by CamScanner

- செய்தி படித்தல்
- கவிதை படித்தல்
- சிறுகதை படித்தல்

வகுப்பு 6–8 , 9–10, 11–12

- பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, மாறுவேடப்போட்டி, ஓவியப்போட்டி, நடனம், பாடல்
- மொழி
- பாரம்பரிய வீர விளையாட்டுகள்
- நாட்டுப்புறக் கலைகள்
- பல்வேறு விழாக்கள்
- ஊடகம் சார்ந்த நிகழ்வுகள்

  (நாள், வாரம், மாத இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, இணையம் மற்றும் திரைப்படம்)

படித்தல் திறன்

- செய்தி படித்தல்
- கவிதை படித்தல்
- சிறுகதை படித்தல்

குழு செயல்பாடுகள்

- பாடல், நடனம்
- கைவினைப் பொருள்களைக் காட்சிப்படுத்தல்
- பல்வேறு வகையான படைப்புகளைக் காட்சிப்படுத்தல்

வகுப்பு 8–9–10, 11–12

- குறுநாடகங்கள்
- கலந்துரையாடல்
- வினாடிவினா



Scanned by CamScanner

## மொழித்திருவிழாவிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

| வ. எண் | தலைப்புகள் | நேரம் | மதிப் பெண்கள் | மொத்த மதிப் பெண்கள் |
|---|---|---|---|---|
| I | பேச்சுப்போட்டி | | | |
| | கருத்துவளம் | 10 மணித் துளிகள் | 10 | 50 |
| | மொழி ஆளுமை/உச்சரிப்பு / ஏற்றத்தாழ்வு | | 10 | |
| | சொல்நயம் | | 10 | |
| | வெளிப்படுத்தும் திறன் | | 10 | |
| | முடித்தல் திறன் | | 10 | |
| II | படித்தல் திறன் சார்ந்த போட்டி<br>செய்தி/கவிதை /சிறுகதை | | | |
| | பொருள் | 10 மணித் துளிகள் | 10 | 20 |
| | அளவு | | 10 | |
| | பாடல் போட்டி (குழு/தனியாள்) | | | |
| | பொருள் | 10 மணித் துளிகள் | 10 | 30 |
| | அளவு | | 10 | |
| | குரல் வளம் | | 10 | |
| III | கட்டுரைப்போட்டி | | | |
| | தலைப்பு / கருத்துவளம் | 30 மணித் துளிகள் | 10 | 50 |
| | குறிப்புச் சட்டகம் | | 10 | |
| | மேற்கோள் / சொல்நயம் | | 10 | |
| | பிழையின்றி எழுதுதல் | | 10 | |
| | முடிவுரை | | 10 | |
| IV | ஓவியப்போட்டி | | | |
| | ஓவியம் | 40 மணித் துளிகள் | 10 | 30 |
| | பொருள் புரிதல் | | 10 | |
| | தெளிவு | | 10 | |



Scanned by CamScanner

| | | | | |
|---|---|---|---|---|
| V | மாறுவேடம்<br>அந்தந்த மொழியின் தனித்தன்மையினை<br>வெளிப்படுத்தும் விதமாக அமைதல் வேண்டும். | | | |
| | தொடங்கும் விதம் | 10 மணித் துளிகள் | 10 | 30 |
| | செறிவு , நடிப்பாற்றல் | | 10 | |
| | வெளிப்படுத்தும் மொழித்திறன் | | 10 | |
| VI | குறுநாடகம்<br>மொழியின் சிறப்பை வெளிப்படுத்தும்<br>கருத்து சார்ந்த நாடகங்கள் | | | 50 |
| | தலைப்பிற்கு பொருந்துதல் | 30 மணித் துளிகள் | 10 | |
| | தொடங்கும் விதம் | | 10 | |
| | மொழி ஆளுமை | | 10 | |
| | கருத்துவளம் | | 10 | |
| | முடிவு | | 10 | |
| VII | கலந்துரையாடல் | | | |
| | தொடங்கும் விதம் | 30 மணித் துளிகள் | 10 | 30 |
| | மொழி ஆளுமை | | 10 | |
| | கருத்துவளம் | | 10 | |
| VIII | வினாடிவினா உடனடித் தலைப்புகள் தரப்படும் | | | |
| | தலைப்பை ஒட்டி பதிலளித்தல் | 30 மணித் துளிகள் | 10 | 30 |
| | நேரப்பயன்பாடு | | 10 | |
| | கருத்துச்செறிவு | | 10 | |
| IX | காட்சிப்படுத்துதல்<br>பல்வேறு வகையான மொழிசார்ந்த படைப்புகள்,<br>கைவினைப்பொருள்கள், செய்தித்தாள் சேகரிப்பு | | | |
| | மொழி தொடர்பு | | 10 | 30 |
| | தெளிவு / செறிவு | | 10 | |
| | வெளிப்படுத்தும் திறன் | | 10 | |



Scanned by CamScanner

பரிசுகளின் விவரங்கள் :–

| வ. எண் | தலைப்புகள் | வகுப்புகள் | | | பரிசு விவரம் |
|---|---|---|---|---|---|
| | | 6–8 | 9–10 | 11–12 | |
| 1 | பேச்சுப்போட்டி | 3 | 3 | 3 | முதல் பரிசு ரூ.200/– இரண்டாம் பரிசு ரூ.150/– மூன்றாம் பரிசு ரூ.100/– |
| 2 | கட்டுரை | 3 | 3 | 3 | |
| 3 | மாறுவேடம் | 3 | 3 | 3 | |
| 4 | ஓவியம் வரைதல் | 3 | 3 | 3 | |
| 5 | ஆடல் | 6 பேர் | | | |
| 6 | பாடல் | | | | |
| 7 | செய்தி | 2 | 2 | 2 | |
| 8 | கவிதை | 2 | 2 | 2 | |
| 9 | சிறுகதை | 2 | 2 | 2 | |
| 10 | காட்சிப்படுத்துதல் | | | | |
| 11 | Craft | 1 | 1 | 1 | |
| 12 | Painting | 1 | 1 | 1 | |
| 13 | Photography | 1 | 1 | 1 | |
| 14 | குறுநாடகம் | – | 3 பிரிவுகள் 6 நபர்கள் – 18 | | |
| 15 | வினாடி வினா | | 3பரிசு 4 நபர்கள்– 12 | 3பரிசு 4 நபர்கள்– 12 | |

மேற்குறிப்பிட்ட இப்போட்டிகளில் பள்ளிகளில் உள்ள பல்வேறு மொழி பேசும் மாணவர்களும் கலந்து கொண்டு அவர்களின் திறன்கள் வெளிப்படும் விதமாகப் போட்டிகள் நடத்தப்படவேண்டும். இவர்களை தேர்வு செய்வதற்கு அந்தந்த மொழி அறிந்த ஆசிரியர்கள் நடுவர்களாக நியமித்துக்கொள்ளலாம். குறைந்த பட்சம் ஒரு பள்ளியில் 2 போட்டிகள் நடத்தி முதல் 3 பரிசுகள் வழங்க வேண்டும்.

இப்போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவாக அனைத்து மேல்நிலைப் பள்ளிகளுக்கும், ஒரு பள்ளிக்கு ரூ.1050/– வீதம் அனுமதித்து இணைப்பில் உள்ளவாறு மாவட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்படுகிறது. விடுவிக்கப்படும் நிதியை உடனே பள்ளிகளுக்கு அனுப்பி மொழித்திருவிழாவினை சிறப்பாக கொண்டாட தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தவும், விழா முடிந்தவுடன் அது சார்ந்த புகைப்படங்களுடன் கூடிய தொகுப்பறிக்கையை MDO மூலம் தயாரித்து மாநில திட்ட இயக்ககத்திற்கு அனுப்பிடவும் அனைத்து மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் / முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு– நிதி விடுப்பு பட்டியல்

மாநில திட்ட இயக்குநருக்காக

நகல்–அனைத்து மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்/முதன்மைக் கல்வி அலுவலர்கள்



Scanned by CamScanner

**Fund released for Celebrating Language Festival for the year 2019-20**

| S.No. | District | Total no. of Higher Secondary Schools | Amount Allotted @ Rs.1050/- per school |
|---|---|---|---|
| 1 | Ariyalur | 52 | 54600 |
| 2 | Chennai | 56 | 58800 |
| 3 | Coimbatore | 108 | 113400 |
| 4 | Cuddalore | 115 | 120750 |
| 5 | Dharmapuri | 104 | 109200 |
| 6 | Dindigul | 85 | 89250 |
| 7 | Erode | 106 | 111300 |
| 8 | Kancheepuram | 136 | 142800 |
| 9 | Kanniyakumari | 59 | 61950 |
| 10 | Karur | 56 | 58800 |
| 11 | Krishnagiri | 104 | 109200 |
| 12 | Madurai | 106 | 111300 |
| 13 | Nagapattinam | 76 | 79800 |
| 14 | Namakkal | 93 | 97650 |
| 15 | Perambalur | 40 | 42000 |
| 16 | Pudukkottai | 106 | 111300 |
| 17 | Ramanathapuram | 70 | 73500 |
| 18 | Salem | 155 | 162750 |
| 19 | Sivagangai | 68 | 71400 |
| 20 | Thanjavur | 103 | 108150 |
| 21 | The Nilgiris | 36 | 37800 |
| 22 | Theni | 69 | 72450 |
| 23 | Thoothukkudi | 56 | 58800 |
| 24 | Tiruchirappalli | 101 | 106050 |
| 25 | Tirunelveli | 103 | 108150 |
| 26 | Tiruppur | 74 | 77700 |
| 27 | Tiruvallur | 113 | 118650 |
| 28 | Tiruvannamalai | 144 | 151200 |
| 29 | Tiruvarur | 77 | 80850 |
| 30 | Vellore | 185 | 194250 |
| 31 | Villupuram | 189 | 198450 |
| 32 | Virudhunagar | 98 | 102900 |
| **Total** | | **3043** | **3195150** |

(Rupees Thirty One Lakh Ninety Five Thousand One Hundred and Fifty only)

**For State Project Director**

5/2/20



Scanned by CamScanner